பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 15 சனிக்கிழமை 03.12.2022 கதிர் 280

## 7 புதிய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதி

இலங்கையில் ஏழு புதிய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 7 கட்சிகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகப் பெயரிடத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது 2



# வடக்கு ஆளுநருக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுங்கள்

### ஜனாதிபதியிடம் சீ.வீ.கே. கடிதம் மூலம் வலியுறுத்து





(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அரசமைப்பைத் தொடர்ந்து மீறி வருகின்றார். அவருக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரிடம் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம். 8

## மக்கள் போராட்டம் மீண்டும் வெடிக்கும்

### முஜிபுர் ரஹ்மான் கூளுரை




இலங்கையில் உக்கிரமடைந்து செல்லும் பொருளாதார நிலைமை காரணமாக மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கும். அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் எச்சரிக்கைக்கு அஞ் சப்போவதில்லை.

–இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

'மக்கள் இனிப் 2

## கோட்டாபய ஓட ஓட விரட்டப்பட்டதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்

### ரணிலுக்குச் சம்பிக்க எச்சரிக்கை



கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட அதே நிலைமை ஏனையவர்களுக்கும் ஏற்படும் என்பதை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர வேண்டும்.

–இவ்வாறு 43 ஆம் படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் இனியாவது யோசிக்க வேண்டும். திறமையான ஒருவரை – நல்ல முறையில் 2

## இருண்டது பிரியமாலி வீடு மின் இணைப்பு துண்டிப்பு



பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டு விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ள திகோ குழும உரிமையாளர் திலினி பிரியமாலியின் வீட்டில் நேற்று முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது என்று இலங்கையின் தேசிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மின்சார சபையை மேற்கோட்காட்டி இந்தச் செய்தி இன்று வெளியிடப்பட்டுள்ளது. 2

## கொழும்பை வந்தடைந்த பிறிதொரு உரக்கப்பல்

பெரும்போக நெற்செய்கைக்கு அத்தியாவசிய உரமாக விளங்கும் 41 ஆயிரத்து 678 மெற்றிக் தொன் மியூரேட் ஒப் பொட்டாஷ் பன்டி உரத்தை ஏற்றிய கப்பல் கொழும்பு துறைமுகத்தைவந்தடைந்துள்ளது.

உரத் தொகையை இறக்கும் பணிகள் இன்று இடம்பெறவுள்ளன என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 16 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்துடன் மற்றுமொரு கப்பலும் இலங்கையை வந்தடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## முன்னாள் விடுதலைப்புலிகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்துக!

### அரசிடம் சம்பிக்க வேண்டுகோள்

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 12 ஆயிரத்து 600 விடுதலைப்புலி உறுப்பினர்களின் அறிவையும் திறனையும் நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தலாம்.

– இவ்வாறு 43ஆம் படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்கரணவக்க தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

## உணவுப் பஞ்சத்தின் தாக்கம் சில நாள்களில் மோசமடையும்

### தமிழரசுக் கட்சியின் செயலர் சத்தியலிங்கம் தெரிவிப்பு



(வவுனியா நிருபர்)

இலங்கையில் உணவுப் பஞ்சத்தின் விளைவை இன்னும் சில காலத்தில் சுகாதார குறிகாட்டிகளில் அவதானிக்கலாம் என்று தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா, பூந்தோட்டத்தில் சேதன நகர வீட்டுத் தோட்டத்தில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், 2

## கல்விச் சுற்றுலா சென்றிருந்த மாணவன் நீச்சல் தடாகத்தில் இருந்து சடலமாக மீட்பு

நீச்சல் தடாகத்தில் இருந்து 15 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வென்னப்புவ, பொரலஸ்ஸவிலுள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் இருந்தே மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

குறித்த மாணவன் கலகெதர பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், சந்தலங்காவ பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி கற்று வந்தவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மாகந்துறையில் உள்ள தனியார் வகுப்பில் இருந்து 80 பேர் கொண்ட பாடசாலை மாணவர்கள் சுற்றுலா சென்றிருந்த வேளையில், சக மாணவர்களுடன் குறித்த மாணவன் நீச்சல் தடாகத்தில் நீராடிய போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## மக்கள் போராட்டம் ........

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடத்தினால் இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மீண்டும் கூறி வருகின்றமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது நன்றாகக் குழம்பிப் போய் இருக்கின்றார். நாட்டின் நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து கொண்டு செல்கின்றதே தவிர முன்னேற்றமடையவில்லை. இதனால் மீண்டும் மக்கள் வீதிக்கு வருவார்கள். இதை உணர்ந்ததால்தான் ஜனாதிபதி இந்த நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர்களை இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். மக்கள் இதற்கெல்லாம் அஞ்சப்போவதில்லை. அவர்கள் மீண்டும் வீதிக்கு வருவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராவதற்கு முன் நாடாளுமன்றில் ஆற்றிய உரைகளைக் கொஞ்சம் எடுத்துப் பாருங்கள். மக்கள் போராட்டத்துக்கு நூறு வீத ஆதரவு தெரிவித்துப் பேசி இருந்தார். நூறு வீத ஜனநாயகவாதியாகத் தன்னைக் காட்டி இருந்தார்.

போராட்டக்காரர்களின் குரலுக்குக் காது கொடுக்க வேண்டும். அவர்களின் போராட்டம் சரியானது என்றெல்லாம் ஜனாதிபதி கூறி இருந்தார்.

இன்று ஜனாதிபதியானதும் அப்படியே தலைகீழாக மாறிவிட்டார். அவர் செயற்படுவது நாட்டு மக்களுக்காக அல்ல. 'மொட்டு'க் கட்சியினருக்காக - ராஜபக்ச குடும்பத்துக்காக. அதனால் அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்கும் விதமாக அவர் செயற்படுகின்றார்.

தங்களைப் பாதுகாக்கக்கூடிய சிறந்த பாதுகாவலன் ரணில்தான் என்று ராஜபக்ஷ குடும்பத்துக்குத் தெரியும். அதனால்தான் அவரைக் கூட்டி வந்து ஜனாதிபதியாக்கி இருக்கின்றார்கள் - என்றார்.

## கோட்டாபய ......

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி நடத்தக்கூடிய ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டாம். அது இல்லாமல், எங்களது கட்சித் தலைவர்தான் ஆட்சி செய்ய வேண்டும், எங்களது கட்சிதான் ஆட்சி செய்ய வேண்டும் என்ற மனோநிலையில் இருந்து மக்கள் மாறுபட வேண்டும்.

மக்களால் ஓட ஓட விரட்டப்பட்ட கோட்டாபய ராஜபக்ச சும்மா ஜனாதிபதி அல்ல. 69 இலட்சம் வாக்குகளைப்

பெற்றவர். ஜே.ஆரைப் போன்று முழுமையான நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவர். அரச நிர்வாகத்தை இராணுவ அதிகாரிகளை நியமித்து கைக்குள் எடுத்தவர். அப்படிப்பட்ட பலமான ஜனாதிபதியைத்தான் மக்கள் நேரில் களமிறங்கி விரட்டியடித்தார்கள்.

அவருக்கு ஏற்பட்ட நிலைமை வேறு ஒருவருக்கும் ஏற்படாது என்று சொல்ல முடியாது. தனக்கு விருப்பம் இல்லாத அரசைத் தேர்தல் மூலம் தோற்கடிப்பது போல் நேரடியாக வீதியில் களமிறங்கியும் தோற்கடிக்க முடியும் என்று மக்கள் நிரூபித்துள்ளார்கள்.

மக்களின் தற்போதைய போராட்டத்தை முறியடிப்பதற்காகப் பாடுபடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர வேண்டும் - என்றார்.

## உணவுப் ......

இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என பாதீடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் கதைக்கும் அரசியல்வாதிகளும் மற்றும் நிபுணர்களும் கூறுகின்றனர்.

ஆனால், ஏற்கனவே இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் வந்துவிட்டது. இதன் தாக்கம் இன்னும் சில நாட்களில் மோசமாக தெரியக்கூடிய வாய்ப்புள்ளது.

நிறை குறைந்த பிள்ளைகள் பிறக்கின்றார்கள். பாடசாலை மாணவர்கள் மந்தபோசனையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறுகின்றனர்.

உணவுப் பணவீக்கம் 90 வீதமாக உள்ளது. உலகத்திலேயே உணவுப் பணவீக்கம் கூடிய நாடுகளிலும் 6 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது.

இதற்கான காரணத்தை நாம் பார்க்க வேண்டும். அரசியல் ரீதியான கொள்கை வகுப்பாளர்கள் நிதானமான கொள்கை வகுப்பை மேற்கொள்ள வேண்டும்.

வவுனியாவில் விலங்குகளை மேய்ச்சலுக்கு விட மேய்ச்சல் தரை இல்லை. கடந்த 20 வருடங்களாக மாவட்ட செயலகக் கூட்டங்களில் மேய்ச்சல் தரை தொடர்பில் கதைத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால், இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, அரசு நாட்டில் விவசாயம் தொடர்பான கொள்கை வகுப்பை மேற்கொள்ளும் போது அரசியலுக்காக இல்லாமல் மாவட்டங்களுக்கு ஏற்ற வகையில் உருவாக்க வேண்டும்.

இன்னும் சில காலத்தில் உணவுப் பஞ்சத்தின் விளைவை சுகாதார குறிகாட்டிகளில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும் - என்றார்.

## இருண்டது ......

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கடந்த 4 மாதங்களாக நிலுவையில் உள்ள மின்கட்டணத்தைச் செலுத்தாமையே இதற்குக் காரணம் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மின் கட்டண தொகை கிட்டத்தட்ட நான்கரை இலட்சம் ரூபா எனவும் அந்த நாளிதழ் குறிப்பிடுகின்றது.

வத்தளை, அவெரிவத்தை எட்வர்ட் ஒழுங்கையில் திலினி பிரியமாலி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் வாடகை அடிப்படையில் வசித்து வந்த வீட்டிலேயே மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் ......

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குப் படையினரைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதற்காகக் குழி வெட்டுவதற்கும் அறுவடை செய்வதற்கும் - வீதியைத் துப்புரவு செய்வதற்கும் அவர்களைப் பயன்படுத்தக்கூடாது.

நிறுவன ரீதியான செயற்பாட்டில் படையினரை ஈடுபடுத்த வேண்டும். சீனாவில் அவ்வாறு செய்தார்கள். உலகின் பல நாடுகளிலும் இவ்வாறே செய்துள்ளார்கள். உலகின் முதலிடத்தில் இருக்கும் 'ஹுவாவி' நிறுவனத்தை இயக்குவது படையினர்தான். இலங்கையில் துட்டகைமுனு மன்னன்கூட அவ்வாறு செய்திருக்கின்றார்.

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களைக்கூட நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும். புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 12 ஆயிரத்து 600 விடுதலைப்புலி உறுப்பினர்களும் வடக்கு, கிழக்கில் நிர்க்கதியாகி இருக்கின்றார்கள். அவர்களிடம் பல்வேறுபட்ட தொழில் அனுபவமும் திறமையும் உள்ளது. அதை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்-என்றார்.

## 7 புதிய ......

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

என்று அதன் தலைவர் சட்டத்தரணி நிமல்ஜிபுஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய காங்கிரஸ் கட்சி, தெவன பரபுர, இலங்கை சமூக ஜனநாயகக் கட்சி, தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, மஹஜன வியத் பெரமுன, ஈரோஸ் ஜனநாயக முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகப் பெயரிடப்பட்டுள்ளன.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சம்பந்தன் கூறும் செய்தி

"தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வு காண்பது என்பது கானல் நீராக மாறிக் கொண்டிருக்கும் கனவு" என்று ஆற்றாமையோடு வெதும்பியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

ஒன்றுபட்ட, பிளவுபடாத, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்று வலிந்து வலிந்து, திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்த மூத்த தமிழ்த் தலைவரின் வாயிலிருந்து – அவரின் வாழ்வின் அந்திம காலத்தில் – இப்படி ஓர் இயலாமையுடன் கூடிய – ஆதங்கம் நிறைந்த – விசனம் வெளிப்படுகின்றது. அதன் அர்த்தம் என்ன? அது சொல்லாமல் சொல்லும் செய்தி என்ன?

பேரினவாத இனவெறிச் சிந்தனையில் மூழ்கிக் கிடக்கும் பௌத்த, சிங்கள ஆட்சி கட்டமைப்பிடமிருந்து நீதி, நியாயமான தீர்வு ஒன்று சிறுபான்மையினரான தமிழர்களுக்குப் பேச்சு மூலமோ, இணக்கமாகவோ கிட்டப் போவதில்லை என்பதுதான் அது சொல்லும் முதலாவது செய்தி.

வேறு வழியின்றி, தமக்கு மிச்சமாக இருக்கக்கூடிய ஒரேயொரு கொழுகொம்பான சர்வதேச சமூகத்திடம் தமிழர் தேசம் தன் இயலாமையை தெரிவித்து, சிங்கள தேசத்திடமிருந்து மீட்சி பெற்றுத் தாருங்கள் என்று முறைப்பாடு செய்கின்றது. அது சம்பந்தர் சொல்லும் அடுத்த செய்தி.

இவ்விடயத்தில் அனைத்துலக சமூகம் தலைமை தாங்கி, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு ஒரு நியாயமான ஏற்பாட்டிற்கு – தீர்வுக்கு –அழுத்தம் கொடுப்பது கடமை என்று சம்பந்தன் சுட்டுகின்றார்.

இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பு வெறும் பெயருக்கான பங்களிப்போ அல்லது ஏதோ ஒரு கடமைக்கான செயற்பாடோ அல்ல. அதையும் தாண்டி, இவ்விடயத்தில் சர்வதேச சமூகத்திற்கு தவிர்க்கவே முடியாத கடப்பாடு உண்டு; புறம் தள்ள முடியாத பொறுப்பு உண்டு; கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய – தட்டிக் கழிக்கவே முடியாத – கடமைப்பாடு உண்டு.

அதை இன்னும் சற்று ஆழமாக தனது அந்தச் செவ்வியில் சம்பந்தன் வலியுறுத்தி இருக்க வேண்டும். தவறிவிட்டார்.

"சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியல் கருத்து உலகில், அடிப்படையான மாற்றங்கள் நிகழும் என நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள பௌத்த மேலாண்மை வாதத்தின் வீச்சும் வலுவும் ஆக்கிரமிப்புச் சிந்தனையும் தணிந்து போகவில்லை. மாறாக, அது புத்துயிர்ப்புப் பெற்று வருகிறது" – என்று ஒன்றரை தசாப்தங்களுக்கு முன்னரே கூறி வைத்தார் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

மூன்று தசாப்த கால அகிம்சை வழித் தீர்வுத் தேடல் முயற்சி தோற்றுப் போன நிலையில் அவர் ஆயுதமேந்தியமையை அக்கூற்று நியாயப்படுத்தி நின்றது.

அந்தப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்த சர்வதேசம், பௌத்த –சிங்கள பேரினவாத அரசுடன் சேர்ந்து, அந்தப் போராட்டத்தை அழிக்க முழு அளவில் துணை போனது. ஆனால் அதன் பின்னர் தமிழருக்கு சர்வதேசத்தினால் கூட நீதி பெற்றுத் தர முடியவில்லை.

இறுதியில், இப்போது சம்பந்தன் ஆற்றாமையோடு சர்வதேச சமூகத்திற்கு சொல்லும் செய்தி அல்லது முறைப்பாடு எதைக் காட்டுகிறது? பிரபாகரனின் ஆயுத வழிப் போராட்டம் நியாயம் என்பதைத்தான் சம்பந்தன் கூறும் செய்தி உட்கிடையாக உறுதிப்படுத்தி நிற்கிறது.

# சுமந்திரன் மற்றும் சாணக்கியனை மீன் விற்குமாறு கூறினார் திலீபன்!



தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன் மற்றும் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோரை மீன் விற்பதற்கு செல்லுமாறு ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தின் போதே திலீபன் இவ்வாறு ஆவேசத்துடன் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் குழுநிலை விவாதத்தில் உரையாற்றுவதற்கு முன்னர் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹர் டி.சில்வாவுக்குமிடையில் வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் சாணக்கியன் உரையாற்றுவதற்கான நேரம் முடிவடைந்ததையடுத்து அடுத்ததாக வன்னி மாவட்ட உறுப்பினர் திலீபனை உரையாற்றுமாறு சபைக்குதலைமை தாங்கிய வீரசிங்க வீரசுமண அழைத்தார். ஆனால்திலீபன்பேசமுடியாதவாறுசாணக்கியன் சபையில் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுத்தினார்.

இதனால் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் பேச முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் சாணக்கியன் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு சபைக்கு தலைமை தாங்கிய வீரசிங்க வீரசுமண அனுமதி கொடுக்காததால் சுமந்திரன் சாணக்கியனுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார். இவ்வாறு சபைக்குதலைமை தாங்கிய வீரசிங்க வீரசுமண, சாணக்கியன், சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் தர்க்கம் ஏற்பட்டதால் தனது உரையை ஆரம்பிப்பதும் பின்னர் நிறுத்துவதுமாக திலீபன் தடுமாறிக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த திலீபன் "ஐயோ.. இது என்ன மீன்கடையா...? தயவு செய்து கத்தாதீர்கள். மீன் கடையில் கத்துவது போல் கத்துவது என்றால் பேசாமல் இருவரும் மீன் விற்க போங்கள்" என்றார். இதன் பின்னர் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரை அமைதிப்படுத்திய சபைக்கு தலைமை தாங்கிய வீரசுமன வீரசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் உரையாற்றுவதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தார்.

# 70 ஆயிரம் பேரைக் கொன்று குவித்த பொன்சேகா ஜனநாயகம் மனித உரிமை பற்றிக் கற்பிக்கின்றார்!

## முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க சபையில் சாட்டை



ஜனநாயகம் மனித உரிமைகளை இன்று எமக்கு கற்றுத்தரும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா அன்று சுமார் 70 ஆயிரம் பேரைக் கொன்று குவித்தவராவார். அவ்வாறான ஒருவரால் என்மீது சுமத்தப்படும் போலியான சேறு பூசல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க சபையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ல் சரத் பொன்சேகாவை நோக்கி குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு குழு நிலை விவாதத்தில் பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா ஆற்றிய உரையைத் தொடர்ந்து சபையில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது. அவர் ஆற்றிய உரைக்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

வனஜீவராசிகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழு நிலை விவாதத்தில் சேறு பூசல்கள் மாத்திரமே உள்ளன என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிட்டு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க உரையாற்ற அனுமதி கோரினார்கள்.

எனினும் இந்த பழக்கத்தை நிறுத்திக் கொள்ளுமாறு சபாநாயகர் உறுப்பினர்களை நோக்கிக் குறிப்பிட்டார்.

அவ்வாறாயின் சேறு பூசலையும் நிறுத்த சொல்லுங்கள். வனஜீவராசிகள் அமைச்சின் விவாதத்தின் போது சேறு பூசல்களை இடம்பெறுகின்றன.

காலி முகத்திடலுக்கு மிருகங்கள் வந்தால் அடித்து விரட்டட்டும் என ஆளும் தரப்பின் பின்வரிசை உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இதனைத் தொடர்ந்து பீல்ட் மார்ஷல்சரத் பொன்சேக்காவை இருக்கையில் அமருமாறு சபாநாயகர் குறிப்பிட்டார். இதன்போது எழுந்து உரையாற்றிய முன்னாள் வனஜீவராசிகள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, ''எனது பெயரைக் குறிப்பிட்டதால் நான் பதிலளிக்க வேண்டும். நான் கடந்த 9 மாதங்களாக நாடாளுமன்றத்தில் உரையாற்றவில்லை.". - என்றார். இதன்போது குறிக்கிட்ட சபாநாயகர் "உங்களின் பெயரை குறிப்பிடவில்லை'' என்றார்.

இதன்போது சரத் பொன்சேக்கா விமலவீர திஸாநாயக்கவை நோக்கி , "யானை தடுப்பு கால்வாய் அமைத்தது முட்டாள் தனமானது" என்று குறிப்பிட்டார்.

இவர் அமைச்சராக பதவி வகிக்கும் போது ஒன்றும் செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த விமலவீர திஸாநாயக்க , ''அரசாங்கத்தின் செலவு இல்லாமல் யானை கால்வாய் அமைத்தேன். அதனால் இன்று அந்த பிரதேச மக்கள் பாதுகாப்பாக உள்ளார்கள். 60 ஆயிரம் , 70 ஆயிரம் பேரை கொன்றவர் இன்று எமக்கு ஜனநாயகம் பற்றி குறிப்பிட வருகிறார். சண்டியர்களை பாதுகாத்த பீல்ட் மார்ஷல் எமக்கு ஆலோசனை வழங்க வருகிறார்''. - என்றார்.

# இஸ்ரேல் படையினர் மீது கத்திக்குத்து பாலஸ்தீனியர் ஒருவர் சுட்டுக் கொலை



ஜெருசலேம், டிசெ.03

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குகரையின் நப்லஸ் நகரில் ஹவ்ரா என்ற பகுதியில் இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, அங்கு வந்த 3 பாலஸ்தீனர்களிடம் இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரர் விசாரணை நடத்தியுள்ளனர்.

அதில், ஒரு நபர் பாதுகாப்பு படை வீரரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையுடன், பாதுகாப்பு படை வீரர் வைத்திருந்த துப்பாக்கியை பறிக்க முற்பட்டார். மேலும், தான் வைத்திருந்த கத்தியை கொண்டு இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரரையும் தாக்கினார். பதிலுக்கு இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர் தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியை கொண்டு தாக்குதல் நடத்திய பாலஸ்தீனியரைச் சுட்டார்.

இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் – பாலஸ்தீனர்கள் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்ற நிலையில் இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டில் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய பாலஸ்தீனியர் உயிரிழந்துள்ளார். தகவலறிந்து விரைந்து வந்த

இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் கத்திக்குத்து தாக்குதலில் கழுத்தில் காயமடைந்த வீரரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். இந்தச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ரஷ்யாவுக்கு எதிராக அமெ., பிரான்ஸ் உக்ரைனை ஆதரிப்பதில் மிக உறுதி

### இருநாட்டுத் தலைவர்களும் தெரிவிப்பு



வாஷிங்டன்,டிசெ.03

அண்மையில், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக் ரனை சந்தித்தபிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஜோ பைடன், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான வழியை ரஷ்ய அதிபர் புடின் உண்மையிலேயே தேடுகிறார் என்றால், அவரைச் சந்திக்கவும் தயார் என கூறியுள்ளமையடன், ஆனால், புடின் அவ்வாறு தேடவில்லை என்றும் கூறினார்.

அதேநேரத்தில், இந்தச் சந்திப்பின் போது ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவும், பிரான்ஸும் தொடர்ந்து உக்ரைனை ஆதரிக்கும் என்றும் அவர்கள் உறுதி அளித்தனர். இதனைத் தொடர்ந்து பேசிய இம்மானுவேல் மேக்ரன், ரஷ்யாவுடன் சமரசமாக செல்லுமாறு உக்ரைனை நாங்கள் வற்புறுத்த மாட்டோம்

என்று தெரிவித்தார். அதனை அவர்கள் ஏற்க மாட்டார்கள் என்றும் மேக்ரன் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் கருத்து குறித்து தனது நிலைப்பாட்டை ரஷ்யா வெளிப்படுத்தி உள்ளது.

மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ், சமரசபேச்சுவார்த்தைக்கு வாய்ப்பு இருப்பதாக அமெரிக்கா கூறுகிறது. அதேநேரத்தில், அதற்கு முன்பாக உக்ரைனைவிட்டு ரஷ்யபடைகள் வெளியேறவேண்டும் என்று அது நிபந்தனை விதித்துள்ளது. இந்த நிபந்தனையை ரஷ்யா ஒருபோதும் ஏற்காது.

அதோடு, ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதிகளை அமெரிக்கா இன்னும் அங்கீகரிக்கவில்லை. அந்தப் பகுதிகளுக்கு ரஷ்யா சட்டவிரோதமாக உரிமை கோருவதாகவே அமெரிக்கா தெரிவித்து வருகிறது. எனவே, இத்தகைய சூழலில் சமரசப் பேச்சுக்கு வாய்ப்பு இல்லை என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானை மீட்க சவுதி பெரும் உதவி

லாகூர், டிசெ.03

பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. குறிப்பாகச் சமீபத்தில் ஏற்பட்ட கனமழை வெள்ளம் காரணமாக பாகிஸ்தான் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில், பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வரும் பாகிஸ்தானுக்கு பல்வேறு நாடுகளும் உதவி வருகின்றன. குறிப்பாக, சவுதி அரேபியா, துருக்கி போன்ற நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவி வருகின்றன.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கு மேலும் நிதி மற்றும் மசகு எண்ணெய் உதவியை சவுதி அரேபியா வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த வகையில் பாகிஸ்தானுக்கு மேலும் 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவியாகவும், 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான மசகு எண்ணெய் உதவியையும் சவுதி அரேபியா வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



## இனவெறியைத் நானும் எதிர்கொண்டேன் பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் கூறுகின்றார்



லண்டன், டிசெ.03

இங்கிலாந்தின் பக்கிங்ஹாம் அரண்மனையில் கடந்த வாரம் ராணி கமிலாவின் ஏற்பாட்டில் நடந்த விருந்து நிகழ்ச்சியில் லண்டனைத் தளமாகக் கொண்ட தொண்டு நிறுவனமான சிஸ்டா ஸ்பேசின் நிறுவனர் கலந்து கொண்டிருந்த போது, அவரிடம் இளவரசர் வில்லியமின் ஞானத்தாயும், மறைந்த ராணி 2ம் எலிசபெத்தின் உதவியாளருமான லேடி சூசன் ஹஸ்சி இனவெறியைத் தூண்டும் வகையில் கேள்விகளை கேட்டமை பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அதை தொடர்ந்து, அரச குடும்பத்தால்


தனக்கு வழங்கப்பட்டிருந்த கௌரவ பதவிகளை லேடி சூசன் ஹஸ்சி ராஜினாமாச் செய்தார்.

இந்த நிலையில் லண்டனில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களை சந்தித்த பிரதமர் ரிஷி சுனக்கிடம் இந்த இனவெறிப் பிரச்சினை குறித்து பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். இந்திய வம்சாளியை சேர்ந்த ரிஷி சுனக் அதற்கு பதிலளிக்கையில், அரச அரண்மனை தொடர்பான விடயங்களில் நான் கருத்துத் தெரிவிப்பது சரியாக இருக்காது. இருப்பினும் இந்த பிரச்சினையில் என்ன நடந்தது என்பதை நாம் பார்க்கிறோம். அவர் தவறை ஒப்புக்கொண்டு அதற்கு மன்னிப்பும் கேட்டுள்ளார் என்றார்.

மேலும் அவர் பேசுகையில், கடந்த காலங்களில் நானும் இனவெறியை எதிர்கொண்டுள்ளேன். நான் சிறுவனாக இருந்தபோதும், இளைஞனாக இருந்தபோதும் அதை அனுபவித்துள்ளேன். ஆனால் இப்போதும் அது நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் இனவெறியை கையாள்வதில் நம்முடைய நாடு நம்பமுடியாத முன்னேற்றம் அடைந்துள்ளது. இருப்பினும் நாம் செய்ய வேண்டிய பணிகள் இன்னும் உள்ளன. அத்துடன் நாம் தொடர்ந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு சிறந்த எதிர் காலத்துக்கு செல்வது சரியானது எனவும் கூறியுள்ளார்.

# உலகில் மிகவும் வலுவான ஜனநாயகம் இந்தியாதான்

## ஜ.நா பிரதிநிதி தெரிவிப்பு




நியூயார்க், டிசெ.03

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் 2021 மற்றும் 2022 ஆகிய 2 ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இந்தியா செயல்பட்டு வருகின்ற நிலையில், மாதந்தோறும் பாதுகாப்பு கவுன்ஸிலின் தலைமைப் பொறுப்பை ஒவ்வொரு நாடும் சுழற்சி முறையில் வகித்து வருகின்றன. கடந்த ஆண்டு ஆவணி மாதம் இந்தியா தலைவராக இருந்தது.

இந்த நிலையில், நடப்பு டிசம்பர் மாதத்துக்கு இந்தியா மீண்டும் தலைவர் ஆகியுள்ளமையுடன், நேற்று முன்தினன் தலைமைப் பொறுப்பை ஏற்றது. ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருச்சிரா காம்போஜ், தலைவர் இருக்கையில் அமர்ந்தார். இதனையொட்டி நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் ருச்சிரா காம்போஜிடம் இந்தியாவின் ஜனநாயகம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த காம்போஜ், ஜனநாயகத்தில் என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்கு யாரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை. இந்தியா பழம்பெருமை வாய்ந்த தேசம். இந்திய ஜனநாயகத்தின் வேர்கள் 2,500 ஆண்டுகளுக்கு முந்தையது. நாங்கள் எப்போதுமே ஜனநாயகமாகத்தான் இருந்துள்ளோம். அண்மைக் காலத்தை எடுத்துக் கொண்டாலும் ஜனநாயகத்தின் 4 தூண்களும் வலுவாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல எங்கள் நாட்டில் சமூக வலைதளம் கூட சுதந்திரமாக இருக்கிறது. அதனால் இந்தியா தான் உலகிலேயே வலுவான ஜனநாயகம். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாங்கள் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவை

நடத்துகிறோம். எங்கள் நாட்டில் யார் வேண்டுமானாலும் அவர்கள் மனதில் இருப்பதைச் சொல்லும் உரிமை இருக்கின்றது. நாங்கள் தொடர்ச்சியாக மாற்றங்கள், ஏற்றங்களைக் கண்டு வருகிறோம். எங்கள் முன்னேற்றம் மிகவும் சிறப்பாக உள்ளது என்று ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் ருச்சிரா காம்போஜ் தெரிவித்துள்ளார்.



# இந்தியா – அமெரிக்கா இடையே சீனா தலையிடுவது தேவையில்லாத வேலை!

## பீஜிங்குக்கு வொஷிங்டன் பதிலடி

வாஷிங்டன், டிசெ.03

உத்தரகாண்ட் மாநிலத்தில் சீனாவுடனான சர்வதேச எல்லையில் இந்தியா–அமெரிக்கா போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், இந்தக் கூட்டுராணுவப் பயிற்சியானது, இந்தியா மற்றும் சீனா இடையேயான தீர்வு ஒப்பந்தத்தை மீறுவதாக சீனா குறை கூறியது.

சீனாவின் கருத்துக்கு இந்தியா பதிலடி கொடுத்திருந்தது. இது தொடர்பாக வெளியுறவுத்துறை தரப்பில் கூறுகையில், இந்தியா எந்த நாட்டுடன் இராணுவப் பயிற்சி நடத்துகிறது, யாருடன்ஈராணுவப் பயிற்சி நடத்தவில்லை என்பது இந்தியாவின் உரிமை. இதை எந்த மூன்றாம் தரப்பும் முடிவு செய்ய முடியாது. எங்கள் இராணுவப் பயிற்சியில் மூன்றாம் தரப்பினர் முடிவு செய்ய அதிகாரம் இல்லை என்று கூறியது.

இந்நிலையில், இந்தியாவுடனான கூட்டு இராணுவ பயிற்சிக்கு சீனா எதிர்ப்பு தெரிவித்ததற்கு அமெரிக்காவும் பதிலடி கொடுத்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க தூதர் எலிசபெத் ஜோன்ஸ் கூறுகையில், எங்கள் இந்திய கூட்டாளி தெரிவித்த கருத்தை நான் இங்கு மேற்கோள்காட்ட விரும்புகிறேன். இந்தியா – அமெரிக்கா இடையேயான கூட்டு இராணுவ பயிற்சியில் தலையிடுவது சீனாவுக்கு தேவையில்லாதவ்வேலை என்று தெரிவித்துள்ளார்



# ஜம்மு காஷ்மீர் எல்லையில் பயங்கர ஆயுதங்கள் மீட்பு!

ஸ்ரீநகர், டிசெ.03

ஜம்மு காஷ்மீரின் உரி செக்டரில் புலனாய்வு அமைப்புகள் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநில பொலிஸார் தெரிவித்த பயங்கரவாதிகளின் ஊடுருவல் குறித்த குறிப்பிட்ட தகவலின் அடிப்படையில், இந்திய ராணுவம் நவம்பர் 29 முதல் டிசெம்பர் 1 வரை கட்டுப்பாட்டு எல்லைக்கு அருகே தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தது.

இந்த நடவடிக்கையின் போது இரண்டு ஏகே 74 தாக்குதல் துப்பாக்கிகள், இரண்டு சீன துப்பாக்கிகள், இரண்டு ஏகே 74 தாக்குதல் ரைபிள் தோட்டாக்கள், இரண்டு கைத்துப்பாக்கி தோட்டாக்கள், 117 ஏகே 74 தாக்குதல் துப்பாக்கி ரவைகள் மற்றும் போதைப் பொருள்கள் ஆகியவற்றை இந்தியப் பாதுகாப்பு படையினர் கண்டறிந்து மீட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. மேலும், இந்த நடவடிக்கை யின் மூலம் எதிரிகளின் திட்டங் களை பாதுகாப்புப்படையினர் வெற்றிகரமாக முறியடித்துள்ள னர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜி20 தலைமை பொறுப்பேற்ற

# இந்தியாவுக்கும் மோடிக்கும் பைடன் ஆதரவு தெரிவிப்பு!



வொஷிங்டன், டிசெ.03

இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் முடிவில் ஜி20 அமைப்பிற்கு, இந்த ஆண்டு இந்தியா தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது.

இதற்கான மாநாட்டையும் இந்தியா அடுத்த ஆண்டு தலைமை ஏற்று நடத்தவுள்ளது. இந்தப் பொறுப்பு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியாவுக்கு அமெரிக்கா தனது ஆதரவை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அதிபர் ஜோ பைடன் கூறுகையில், இந்தியா, அமெரிக்காவின் வலுவான நட்புறவு நாடு. பருவநிலை மாற்றம், எரிசக்தி, உணவு நெருக்கடி ஆகிய சவால்களை எதிர்கொள்ளும்இவ்வேளையில் ஜி20 அமைப்பிற்கு தலைமை பொறுப்பேற்க உள்ள இந்தியாவிற்கும், எனது நண்பர் பிரதமர் மோடிக்கும் எனது ஆதரவை அளிக்க ஆவலுடன்காத்திருக்கிறேன்எனக்குறிப்பிட்டுள்ளார்.

# சுண்ணாம்புக்கல் சுரங்கம் இடிந்து விபத்து ஐந்து பெண்கள் உள்பட ஆறு பேர் மரணம்





ராய்ப்பூர், டிசெ.03

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்டர் மாவட்டம் மல்கொன் கிராமத்தில் உள்ள சுண்ணாம்பு கல் சுரங்கத்தில் நேற்று சிலர் சுண்ணாம்பு கல் வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக சுரங்கத்தின் மேற்பகுதி இடிந்து விழுந்தது.

இதில், சுரங்கத்தில் இருந்த பெண்கள் உள்பட பலர் சிக்கிகொண்டனர். இந்த விபத்து குறித்துதகவலறிந்தமீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சுரங்கத்திற்குள் சிக்கிய 3 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் சிக்கி 5 பெண்கள் உள்பட 6 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடாக தலா 4 லட்ச ரூபா வழங்கப்படும் என்று சத்தீஸ்கர் முதலமைச்சர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்குப் பல்கலை புதிய பீடாதிபதி பதவியேற்றார்



(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீட புதிய பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கலாநிதி வ.குணபாலசிங்கம் நேற்று வெள்ளிக்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறையின் முதுநிலை விரிவுரையாளரும், இந்து நாகரீகத்துறையின் தலைவராகவும் இவர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தில் கல்வி பயின்ற முதல் கலை, கலாசார பீடாதிபதி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எல்லைகளை அடையாளப்படுத்த மாஞ்சோலை சார்பில் கோரிக்கை

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் எல்லைகளை அடையாளப்படுத்தி தந்துதவுமாறு கோரி, மாஞ்சோலை பிரதேச சமூக அமைப்புக்களினால் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராசாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவரும்சமூகசெயற்பாட்டாளருமான ஏ.சீ.எம்.நியாஸ்தீன் ஹாஜியார் மற்றும் கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல். அஸ்மி தலைமையிலான குழுவினர் மகஜரைக் கையளித்தனர்.

அண்மைக்கால மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவிலுள்ள கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட காணிகளை கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகம் கையகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், அத்துமீறி எல்லை இடும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைக்கருத்திற் கொண்டே ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லையை அடையாளப்படுத்துமுகமாக இக்கோரிக்கை சமூக மட்ட அமைப்புக்களினால் விடுக்கப்பட்டுள்ளது.



# தேனீ வளர்ப்புக்கு ஊக்குவிப்பு திருகோணமலையில் மும்முரம்





(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநரின் யோசனையின் அடிப்படையில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் சிறு பயிர் ஏற்றுமதி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்திற்கு ஆயிரம் தேனீப் பெட்டிகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் அண்மையில் கோமரன்கடவல பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன.

இங்கு மாகாண விவசாய திணைக்கள அதிகாரிகள் தேனீவளர்ப்புத் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் பணியை மேற்கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு தேனீ பெட்டிகள் வழங்கப்பட உள்ளன.

கிராமப்புற பொருளாதாரத்தினை மேம்படுத்துவது, தேனீ வளர்ப்பு கிராமங்களை உருவாக்குவது மற்றும் உள்ளூர் தேன் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை உருவாக்குவது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கும் இதற்கான உதவி கிடைத்துள்ளது. இந் நிகழ்வில் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்துபண்டா, கோமரன்கடவல பிரதேச செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இரசாயனத்துறையில் பேராசிரியராக கலாநிதி அரசரெத்தினம் பதவியுயர்வு



(பழுவூரான்)

மட்டக்களப்பு துறைநீலாவணையினைச் சேர்ந்த கலாநிதி செ. அரசரெத்தினம் கிழக்கு பல்கலைகழகத்தின் இரசாயனத்துறையில் பேராசிரியராக உயர்வு பெற்றுள்ளார்.

இவரை பேராசிரியராக பதவி உயர்த்துவதற்கு பல்கலைக் கழக பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டம் 26.11. 2022 அன்று கிழக்கு பல் கலைக்கழக துணைவேந்தர் இபேராசிரியர் வி. கனகசிங்கத்தின் தலைமையில் இடம்பெற்றது போது இம்முடிவு எட்டப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் துறைநீலாவணையை பிறப்பிடமாக கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி ஆகியவற்றினை துறைநீலாவணை மகாவித்தியாலயத்திலும், உயர. கல்வியை கல்முனை பாற்றிமா தேசிய பாடசாலையிலும் கற்று, கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியிருந்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது இரசாயனவியல் துறை சிறப்புப் பட்டதாரியான அவர் துறைநீலாவணையைச் சேர்ந்த செல்லத்துரை– பகவதி தம்பதியினரின் புதல்வர்.

## ஓட்டமாவடி – மீராவோடையில் புதனன்று விற்பனை கண்காட்சி









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச மட்ட விற்பனை கண்காட்சியொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

உள்ளூர்உற்பத்தி பொருட்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விற்பனை கண்காட்சி கூடத்தை ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் ஆகியோர்கள் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

இதில் பிரதேச மக்கள் பலரும் கலந்துகொண்டு பொருட்களை கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்லூண்டாய் போராட்டம் சட்டரீதியில் தொடருமாம்!



## வலி.தென்மேற்கு தவிசாளர் ஜெபநேசன் திட்டவட்டம்

மூன்று தினங்களாக இடம்பெற்று வந்த கல்லூண்டாய் போராட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனாலும் சட்டரீதியான போராட்டம் தொடரும் என வலி. தென் மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது–

யாழ். மாநகர சபையினர், வலி. தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கல்லூண் டாய் பகுதியில், யாழ். மாநகரத்தில் சேரும் கழிவுகளை கடந்த 30 வருடங்களாகக் கொட்டிவந்தனர்.

தற்போது மானிப்பாய் பிரதேச சபை யினர் (வலி. தென்மேற்கு) தற்போது, விலங்கு மற்றும் தாவரக் கழிவுகளை சேகரித்து சேதனப் பசளையை உற்பத்தி செய்து வருகின்றனர். இந்நிலையில் அவர்கள் மாநகரசபையின் கழிவுகளையும் தம்மிடம் தருமாறு கடந்த ஆறு மாதங் களுக்கு முன்னர் எழுத்து மூலமாக, யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர். இந்நிலையில் மாந கரசபையினர் 'நாங்களும் சேதனப் பசளை உற்பத்தி செய்து வருகிறோம்.

"எங்களிடம் சேரும் கழிவுகள் எமது உற்பத்திக்கே போதுமானதாக இல்லை. எனவே எங்களிடம் சேரும் கழிவுகளை வழங்க முடியாது' எனக் கூறியுள்ளனர்.

ஆனால் அவர்கள் சேதனப் பசளை உற்பத்திசெய்யவும் இல்லை, குப்பைகளை தரம்பிரித்துக் கொட்டவுமில்லை என பிரதேச சபையினர் குற்றம் சாட்டியுள்ளனர். அங்கு சென்று பார்த்தவேளை பொலுத்தீன், பிளாஸ்டிக், விலக்கு கழிவுகள் மற்றும் தாவரக் கழிவுகள் என்பன ஒன்றாகக் கொட்டியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் வியாழக்கிழமை யாழ். மாநகர சபையினர் மல்லாகம் நீதிம ன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த நிலையில் நீதிமன்றம் இவ்வாறு போராட்டத்துகக இடைக்கால தடை விதித்துள்ளது. இதனை யடுத்து தமது போராட்டம் சட்ட ரீதியாகவும் வேறு விதமாகவும் தொடரும் என மானிப் பாய் பிரதேச சபையின் தவிசாளர் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இறக்குமதி செய்யப்படும் வெங்காய விலை வீழ்ச்சி!



தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

வியாழக்கிழமை இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 200 முதல் 300 ரூபாவாக இருந்த நிலையில், நேற்று (வெள்ளிக்கிழமை) 150 முதல் 170 ரூபா வரை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் ஒரு கிலோ உள்ளூர் சிவப்பு வெங்காயத்தின் மொத்த விலை வியாழக்கிழமையைவிட நேற்று (வெள்ளிக்கிழமை) 340 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

## அனலைதீவுத் துறைமுகத்தில் அட்டை பண்ணைக்கு எதிர்ப்பு!

நேற்று (வெள்ளிக்கிழமை) அனலைதீவு துறைமுகத்தில் அட்டைப் பண்ணைக்கு எதி ராக போராட்டம் ஒன்று முன் னெடுக்கப்பட்டது.



அனலைதீவு கடற்றொழி லாளர்களால் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பில் மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

அட்டைப் பண்ணையால் மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மீன்களின் இனப்பெருக்கத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது.

பலதடவைகள் பல தரப்பினருக்கு இது தொடர் பில் தெரியப்படுத்தியும் உரியவர்கள் மீனவர் களது நிலையைக் கருத்தில் கொண்டு தீர்வு வழங்க வில்லை.

மீனவர்களது நிலையை கருத்தில் கொண்டு தீர்வு வழங்குமாறு கோரி இந்த போராட்டத்தை முன்னெடுக்கிறோம் – என்றனர்.

போராட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தி கோமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## கோப்பாய் தேசிய கல்வியந் கல்லூரி இசைச் சங்கமத்தின் இறுதிப் போட்டி!





யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் இசைச் சங்கமத்தின் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை காலை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சுப்ரமணியம் பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வுநிலை சங்கீதத் துறை ஆசிரியர் சிவகுமார் சக்திதேவி கலந்துகொண்டார்.

இசைச் சங்கமத்தின் இறுதிப் போட்டி கல்வி யியற் கல்லூரியின் விரிவுரையாளர்களான விக்னேஸ்வரி நரேந்திரா , மகாலிங்கம் நிரேஸ் குமார் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் நடைபெற் றது.

மேற்படி இசைச் சங்கமத்தின் இறுதிப் போட்டி யாளர்களாக கல்லூரியின் ஆசிரிய மாணவர்களான சஜிந்தா ஏகாநந்தன் , றொசான் றொபின், உஜேனிதா தங்கமாணிக்கம், கவிதாஞ்சலி ஜீவா ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

இந் நிகழ்வில் கல்லூரியின் விரிவுரையாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், ஆசிரிய மாணவர் கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இராணுவத்தால் கொலைசெய்யப்பட்டோர் வவுனியா சேமமடு பகுதியில் நினைவுகூறல்!



வவுனியா சேமமடு கிராமத்தில் 39 வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட 29 பேரை நினைவுகூறும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) சேமமடுவில் இடம்பெற்றது.

இதன்போது புலம் பெயர்ந்து வாழும் கிராமத்தவர்கள் நிதி பங்களிப்பில் சேமமடு சண்முகானந்தா வித்தியாலயத்தில் சிறுவர் பூங்காவுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன் கிராமத்தில் 1000 மரக்கன்று நாட்டும் நிகழ்வும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதைவேளை கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்ந்து ஆதி விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

## வடக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

01.12.2022 திகதியிடப்பட்டு ஆங் கிலத்தில் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:–

வடக்கு மாகாண ஆளுநரின் அரச மைப்பு மீறல்: மேற்குறிப்பிட்ட விடயத் தலைப்பிலான எமது 24.11.2022 ஆம் திகதிய கடிதத்தின் தொடர்ச்சியாக எழுவது, வடக்கு மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியக நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 10.10.2018 ஆம் திகதி ஆளுநரால் ஒப்புதல் வழங்கப்பட்டு 2054/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நியதிச் சட்டம் ஒன்று அமுலில் இருக்கையில், அதே விடயத்தில் அதற்கு ஒத்ததான புதிய நியதிச்சட்டமொன்றை உருவாக்கிய ஆளுநரின் மாகாண நிர்வாகம் தொடர்பான மற்றும் நியதிச் சட்டவாக்கம் தொடர்பான கேலிக்கூத்தான செயற்பாட்டை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும் புகின்றேன்.

ஏற்கனவே ஒரு நியதிச் சட்டம் அமுலில் இருந்தமை பற்றி, அதனைப் பிரதி பண்ணிய ஆளுநர் மிகத் தெளிவாக அறிந்திருந்தார் என்பது இதனால் வெளிப்படை.

ஆளுநரால் நியதிச் சட்டம் எனக் கூறப்படும் ஆவணத்தின் உள்ளடக்கம் 90 வீதம் மேலே குறிப்பிடப்பட்ட மாகாண சபையால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டத்தை ஒத்ததாகவே உள்ளது.

அதிலுள்ள முக்கிய மாற்றம் பணி யகத்தின் முகாமைத்துவ சபையின் அமைப்பு தொடர்பானதாகும்.

ஏனைய உறுப்பினர்களை தமது நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக வெளியே இருந்து நியமிக்கும் அதிகாரத்தைத் தமதாக்கிக் கொள்வ தற்காகவே இவ்வாறு செயற்பட்டுள்ளார்.

ஊடகச் செய்திகளின்படி தமது வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவராக சுனில் திஸாநாயக்க என்பவரை நியமித்தமையும், அவர் பாய்ந்தடித்து பலாலி விமான நிலையம் இம்மாதம் 12 ஆம் திகதி முதல் மீளவும் சேவைகள் ஆரம்பிக்கும் என ஊடக அறிக்கை வெளியிட்டமையிலிருந்து வெளிப்படையாகின்றது.

ஆச்சரியப்படும் வகையில் இதுவும் இலங்கையின் விமானப்போக்குவரத்து அதிகார சபையின் தலைவரான முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சந்திர சிறியின் அதிகாரங்களை முறையற்ற விதத்தில் தமதாக்கிக் கொண்டமையாகக் காணப்படுகின்றது.

இந்த ஆளுநரின் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அரசமைப்பு மீறல்களுக்கான குறியீடாக இவை அமைவதால் நான் மேலும் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை.

இவற்றுக்கு எதிரான தங்கள் மிகத் துரிதமான, சாத்தியமான நடவடிக் கைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன – என்றுள்ளது.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2022 இல் வெளியிடப்பெற்றது.